# BELIEVERS EASTERN CHURCH

World Church Headquarters, St Thomas Community
Thiruvalla - 689 103, Kerala, India

## மேய்ப்பரின் மடல்

மே–ஜூன் 2026

**உலகம் முழுவதும் பரந்து வாழும் எனக்கன்பான மேய்ப்பர்களுக்கும் தூய திருச்சபையின் அனைத்து விசுவாசிகளுக்கும்.**

நம்முடைய ஆண்டவரும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவானவரின் தயவும் இரக்கமும் சமாதானமும் உங்கள் அனைவரோடும் கூட இருப்பதாக.

கிறிஸ்துவானவர் உயிர்த்தெழுந்தார்!

நமது திருச்சபையின் தெய்வீக இறைவழிபாட்டு நாட்காட்டியின் படி, நாம் இப்பொழுது நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் காலத்தில் இருக்கின்றோம். நம்மைச் சுற்றியுள்ள உலகம் தொடர்ந்து அமைதியற்ற சூழலையும் நிச்சயமற்ற தன்மையையும் அனுபவித்து வந்தாலும், நம்முடைய மீட்பரின் உயிர்த்தெழுதலால் உண்டாகும் அசைக்க முடியாத நம்பிக்கையிலும் மகிழ்ச்சியிலும் வாழ நாம் அழைக்கப்பட்டுள்ளோம். ஏனெனில், நாம் அனைவரும் இணைந்து இவ்வாறு சொல்ல முடியும்: கிறிஸ்துவானவர் உயிர்தெழுந்தார், அவர் உயிரோடு இருப்பதினால் நாளைய தினத்தை என்னால் மேற்கொள்ள முடியும். இந்த துணிவோடும் தைரியத்தோடும் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவானவர் தமது சீடர்களை, - பஸ்கா பெருவிழாவின் மகிழ்ச்சியையும் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவானவரின் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையையும் நம்மைச் சுற்றியுள்ள உலகத்திற்கு பிரதிபலிக்க அனுப்பினார்.

மேலும், இயேசுவானவர் வாக்குறுதியளித்தபடியே, தூய ஆவியானவர் சீடர்கள் மீது இறங்கி, இறைவனின் அன்பின் பிரதிபலிப்புகளாக விளங்குவதற்கு அவர்களுக்கு வலுவூட்டினார்.

மேலும், 'அனுப்பப்பட்டவர்களான' திருத்தூதர்கள், பூமியின் கடைசி எல்லை வரை வெகுதூரம் சென்றார்கள். தூய ஆவியானவரால் பலப்படுத்தப்பட்டு உலகம் முழுவதும் கிறிஸ்துவானவருக்கு சாட்சியாளர்களாக சென்ற பன்னிரெண்டு திருத்தூதர்களையும் கனப்படுத்தும் விதமாக, திருச்சபை 'திருத்தூதர்களின் உபவாசம்' என்று அழைக்கப்படும் ஒரு புனித உபவாச காலத்தை ஒதுக்கியுள்ளது.

**இந்த உபவாசம் எவ்வாறு உருவானது?** திருத் தூதர் பணிகள் 1:4ம் வசனத்தில் பிரதான கட்டளையை நிறைவேற்ற புறப்பட்டு செல்வதற்கு முன்பதாக தூய ஆவியின் வாக்குறுதிக்காக காத்திருக்குமாறு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவானவர் தமது சீடர்களிடம் கேட்டுக்கொண்டதை நாம் காண்கின்றோம். தங்கள் மிஷனரி பணிகளுக்காக இறைவன் தங்களுக்கு அதிகாரமளிக்க வேண்டும் என்று வேண்டி, திருத்தூதர்கள் ஒரு உபவாசத்தை ஆரம்பித்தார்கள் என்று திருச்சபையின் புனித பாரம்பரியம் நமக்கு கூறுகின்றது. பெந்தகோஸ்து நாளில் அவர்கள் தூய ஆவியினால் நிரப்பப்படும் வரை அவர்கள் இந்த உபவாசத்தை தொடர்ந்தார்கள்.

அன்று முதல், திருச்சபையானது இந்த உபவாசத்தை கடைப்பிடித்து வருகின்றது. இது பிரபல்யமான "திருத்தூதர்களின் தவக்காலம்" என்று அழைக்கப்படுகின்றது. திருத்தூதர்களின் தவக்காலம் ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் 16ம் திகதி ஆரம்பித்து, 28ம் திகதி வரை 13 நாட்கள் தொடர்கிறது. அதன் பின் ஜூன் மாதம் 29ம் திகதி புனித பேதுரு மற்றும் புனித பவுல் அடிகளார்களின் திருவிழாவையும் ஜூன் 30ம் திகதி திருத்தூதர்களின் திருவிழாவையும் நாம் கொண்டாடுகின்றோம்.

**இந்த உபவாசத்தை நாம் எவ்வாறு கடைப்பிடிப்பது?**
திருச்சபையின் ஏனைய அனைத்து உபவாச காலங்களைப் போலவே, திருத்தூதர்களின் தவக்காலமும், மென்மேலும் இறைவனை மையமாக கொண்ட, நம்பிக்கையுள்ள வாழ்க்கையை வாழ்வதற்கான நோக்கத்துடன், மன்றாட்டு, உபவாசம் மற்றும் தர்மம் ஆகியவற்றில் நமது கவனத்தை செலுத்த நம்மை அழைக்கிறது. ஆனால், இந்த உபவாசம் திருச்சபையின் ஏனைய உபவாசங்களிலிருந்து வேறுபட்டதாகும், ஏனெனில் இது திருத்தூதர்களின் பணியைத் தொடர நமக்கு அழைப்பு விடுக்கிறது. என் பிள்ளைகளே திருத்தூதர் பணிகள் நூலை முழுமையாக வாசித்து நிறைவு செய்வதற்காக இந்த புனிதமான காலத்தை ஒதுக்குமாறு நான் உங்களை ஊக்குவிக்கின்றேன். ஆசீர்வதிக்கப்பட்ட நித்திய நினைவாகிய எமது அத்தனேசியஸ் யோஹான் முதலாவது மெட்ரோபொலிட்டன் அடிகளார் கூறியது போல, திருத்தூதர் பணிகள் நூலானது, தூய திருச்சபையின் "செயல்திட்டம்" (புளூபிரின்ட்) ஆகும். மேலும், திருத்தூதர்களின் திருப்பணியை புரிந்துக்கொள்வதற்கும், நற்செய்தியை பகிர்ந்துக் கொள்வதற்கும் அவர்களுக்கு இருந்த தளராத அர்ப்பணிப்பை குறித்து சிந்திப்பதற்கு இதுவே நமக்குரிய முதன்மை ஆதாரமாகும். இந்த திட்டமிட்ட செயற்பாட்டின் மூலம் நாம் திருத்தூதர்களின் அடிச்சுவடுகளை பின்பற்ற முயற்சித்து, நற்செய்தியை உலகம் முழுவதிலுமுள்ள அனைவருக்கும் தொடர்ந்தும் பரப்பும் பணியை செய்வதற்கு தேவையான பலத்திற்காகவும் வல்லமைக்காகவும் இறைவனை நோக்கி மன்றாடுகின்றோம்.

**திருத்தூதர்களின் உபவாசத்தை கடைப்பிடிப்பதற்கான மூன்று நடைமுறை வழிகள்.**

**திருப்பணியாற்றுதல்** : திருத்தூதர்களின் உபவாசம், புனித திருத்தூதர்களின் வாழ்க்கை மற்றும் முன்மாதிரிகளைப் பற்றி சிந்திப்பதற்கு ஒவ்வொரு ஆண்டும் ஒரு சந்தர்ப்பத்தை நமக்கு வழங்குகின்றது. ஆனால், அவர்களை கனப்படுத்துவதற்கு நினைவுகூர்வது மாத்திரம் போதுமானதல்ல. மாறாக, திருத்தூதர்கள் ஆரம்பித்த திருப்பணியை நாம் தொடர்ந்தும் முன்னெடுத்து செல்லவதை உறுதி செய்வதன் மூலம் நாம் அவர்களின் நினைவுகளை கனப்படுத்த வேண்டும். அவர்களின் சீடர்களாகவும் ஆன்மீக வழித்தோன்றல்களாகவும் இருக்கின்ற நமக்கு, உயிர்த்தெழுந்த கிறிஸ்துவானவரின் நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் நம்மை சுற்றியுள்ளவர்களுடன் பகிர்ந்துக்கொள்ளும் பொறுப்பை அவர் நமக்கு தந்துள்ளார். எனவே இந்த உபவாச காலத்தில் குறிப்பாக எமது அனைத்து பங்குத்திருச்சபை மற்றும் மறை மாவட்டங்களில் கருணை பணிகள் மற்றும் இரக்கத்தின் பணிகளை நாம் தொடர்ந்தும் முன்னெடுப்போம்.

**மன்றாட்டு** : எபேசியர் 6:1-20ம் வசனங்களில் புனித பவுலடியார் நமக்கு நினைவுப்படுத்துவது போலவே, நம்முடைய குருமார்களுக்காகவும் மிஷனரிகளுக்காகவும் நாம் மன்றாட வேண்டும். அவர்கள் தங்கள் வாழ்க்கையை மீண்டும் அர்ப்பணிக்கவும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் நற்செய்திப் பணியை தொடர ஊக்கமும் பலமும் கிடைக்கும்படியாக நாம் மன்றாட வேண்டும். மேலும், நம்முடைய பிள்ளைகள் மற்றும் வாலிபர்களில் அதிகமானோர் தங்களை அர்ப்பணித்து திருச்சபையில் பணியாற்ற முன்வரும்படியாக நாம் மன்றாடுவோம். நினைவில் வைத்துக்கொள்ளுங்கள், தூய திருச்சபை என்பது கிறிஸ்துவருடைய சரீரமாகும். மேலும், இவ்வுலகில் இயேசுவானவரின் உண்மையான விரிவாக்கமாகவும் அது விளங்குகின்றது.

**கொடுங்கள்** : நமது தசமபாகம் மற்றும் காணிக்கைகளுடன் சேர்த்து, நமது நிதி உதவியால் திருப்பணிகளை ஆதரிக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம். பிலிப்பியர் 4:18ம் வசனத்தில், “அவை நறுமணம் வீசும் காணிக்கையும் கடவுளுக்கு ஏற்புடைய உகந்த பலியுமாகும்” என்று புனித பவுலடிகளார் கூறுகிறார். எனவே, இந்த திருத்தூதர்களின் உபவாச காலம் குறிப்பாக உணவுகளை தவிர்த்து, உபவாசிப்பதன் மூலம் நாம் சேகரிக்கும் பணத்தை நமது திருச்சபையின் பணிகளை ஆதரிப்பதற்காக ஒதுக்கி வைப்பதற்கு ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

எனது பிரியமான பிள்ளைகளே, வழமைப்போலவே, இந்த புனிதமான நாட்களில் உங்கள் ஒவ்வொருவரையும் எனது மன்றாட்டில் நினைவுகூருகின்றேன். திருத்தூதர்களின் முன்மாதிரியை பின்பற்றி, நமது குடும்பங்களிலும் சமூகங்களிலும் பூமியின் கடைசி எல்லை வரை இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியினால் நமக்கு கிடைக்கும் மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் பிரதிபலிக்க நமது அர்ப்பணிப்பை புதுப்பிப்போம். மேலும், நமது உபவாசம், மன்றாட்டிற்கும் உணவை தவிர்ப்பதற்கும் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டால், திருத்தூதர்களின் உபவாசத்தை நாம் தவறவிட்டவர்களாவோம். ஆகையால் திருத்தூதர்களை சொல்லாலும் செயலாலும் பின்பற்றி, அவர்களை கனப்படுத்துவதற்கான அருளை ஆண்டவர் நமக்கு தந்தருளுவாராக. நமது ஆண்டவராகிய இறைவன் அவருடைய விருப்பத்தை பகுத்தறியும் ஞானத்தையும் அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும் வலிமையையும் அவருடைய இரக்கத்தைப் பிரதிபலிக்கும் அன்பையும் உங்களுக்குத் தந்தருளுவாராக.

தூய திரித்துவ இறைவனாகிய; பிதா, குமாரன், தூய ஆவியானவர் தாமே அவருடைய அளவற்ற தயவினாலும் இரக்கத்தினாலும் நம்மை வழிநடத்துவாராக, மேலும், அனைத்து புனிதர்களினதும், தூய தியடோகோஸ் மாதாவினதும் பரிந்துரைகள் இப்பொழுதும் எப்பொழுதும்

இறைவனுடைய சிங்காசனத்தின் முன்னிலையில் நமக்கு பாதுகாப்பாக இருப்பதாக. – ✝ ஆமென்.

தகப்பனின் அன்புடனும் பிரார்த்தனையுடனும்,
கிறிஸ்துவுக்குள் உங்கள் தகப்பன்.



✝ மோரன் மோர் சாமுவேல் தியோபிலஸ்
மெட்ரோபொலிட்டன்.

**திகதி:** 05 ம் திகதி மே மாதம் 2026
**இடம்:** உலகளாவிய திருச்சபை தலைமையகம்

---

**கவனத்தில் கொள்க:** தயவு செய்து இதை உங்கள் பிராந்திய மொழியில் மொழிப்பெயர்த்து, விசுவாசிகளை தைரியப்படுத்தும்படியாக அனைத்து பங்குத்திருச்சபைகளிலும் வாசிக்கும்படியாக செயல்படுங்கள்.